

ஏழ்மையும், அறியாமையும் கனவுகளை
அழித்துவிட அனுமதியோம்...
UNIT - 5
இந்திய
அரசியலமைப்பு
TNPSC - GROUP I, II, II A
திண்ணை
பயிற்சிப் பட்டறை, தேனி
9940970325
Thinnai Theni
Thinnai Competitive Exam
thinnnaimail@gmail.com

ஏழ்மையும் அறியாமையும் கனவுகளை அழித்துவிடஅனுமதியோம்...

# திண்ணை

பயிற்சிப் பட்டறை, தேனி
வழங்கும்

# இந்திய அரசியலமைப்பு



திண்ணை பயிற்சி பட்டறை, 57A, ஜவகர் மெயின்ரோடு, NRT நகர், தேனி

9940970325 Thinnai Competitive Exam Thinnai Theni thinnaimail@gmail.com

# திண்ணை உறுதிமொழி

இரக்கமும் கருணையும் இருகண்களாகட்டும்!

இதழ்கள் இரண்டிலும் புன்னகை மலரட்டும்!

உழைப்பும், உறுதியும் இருதோள்களாகட்டும்!

நேர்மை ஒன்றையே நெஞ்சம் தாங்கட்டும்!

இடதும் வலதும் இணைந்த கரங்களாகட்டும்!

இதயம் என்றும் அன்பால் துடிக்கட்டும்!

தடைகளைத் தாண்டி கால்கள் ஓடட்டும்!

கொட்டும் வியர்வையே மூலதனமாகட்டும்!

சாதி மதம் பேதம் ஒழிப்போம்!

பதவி பணம் தரும் கர்வம் தவிர்ப்போம்!

லட்சியம் விதைத்து வெற்றியை அடைந்து!

லஞ்சம் தவிர்த்து நெஞ்சை நிமிர்த்து!

அறத்தின் வழி நின்று மனிதம் போற்று!

| S.No | பொருளடக்கம் | Page No |
|---|---|---|
| 1 | இந்திய அரசியலமைப்பு | 3 |
| 2 | முகவுரை | 24 |
| 3 | இந்திய அரசியலமைப்பின் பகுதிகள் மற்றும் சரத்துகள் | 28 |
| 4 | குடியுரிமை | 32 |
| 5 | அடிப்படை உரிமைகள் | 35 |
| 6 | அரசுநெறிமுறைக் கோட்பாடுகள் | 45 |
| 7 | மத்திய அரசு | 50 |
| 8 | மாநில அரசு | 98 |
| 9 | யூனியன் பிரதேசங்கள் | 116 |
| 10 | பஞ்சாயத்து அமைப்புகள் | 119 |
| 11 | தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பகுதிகள் | 132 |
| 12 | மத்திய, மாநில உறவுகள் | 133 |
| 13 | நிதி, சொத்து, ஒப்பந்தங்கள் (ம) வழக்குகள் | 143 |
| 14 | வியாபாரம், வணிகம், இந்திய எல்லைக்குள் மேற்கொள்ளுதல் | 147 |
| 15 | பொதுப்பணிகள் | 148 |

| | | |
|---|---|---|
| 16 | தேர்தல்கள் | 157 |
| 17 | தாழ்த்தப்பட்ட(SC), பழங்குடியினர்(ST), ஆங்கிலேய இந்தியர்கள் & மற்ற பிரிவிற்கான சிறப்பு உரிமைகள் | 169 |
| 18 | ஆட்சி மொழிகள் | 172 |
| 19 | நெருக்கடி நிலை | 175 |
| 20 | பல்வகை (அ) மற்றவைகள் | 178 |
| 21 | சட்டதிருத்தம் | 179 |
| 22 | தற்காலிக & இடைமாறுகால சிறப்புரிமை | 182 |
| 23 | குறுந்தலைப்புகள், தொடக்கம், அங்கீகரிக்க | 187 |
| 24 | சட்டத்திருத்தங்கள் | 188 |


தேனி ★ 99409 70325

# தற்காலிக & இடைமாறுகால சிறப்புரிமைகள்
## (Temporary, Transitional & Special Provisions)

## பகுதி - XXI விதி 369 - 392

### ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கான தற்காலிக சிறப்பு அந்தஸ்து: (Art 370) (Temporary provisions with respect to the state of Jammu and Kashmir)

- இந்தியாவில் தனி அரசியலமைப்பு பெற்றுள்ள மாநிலம் - ஜம்மு-காஷ்மீர்
- 1957 நவம்பர் 26-ல் ஜம்மு-காஷ்மீர் அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்தது.
- இந்திய குடியரசு தலைவர் ஜம்மு-காஷ்மீர் அரசியலமைப்பை எந்த சூழ்நிலையிலும் நீக்க இயலாது.
- இந்திய அரசியலமைப்பு சட்டப்படி-1956 வரை ஜம்மு காஷ்மீர் Part-B மாநிலமாக இருந்தது.
- 1956 மாநில மறுசீரமைப்பு சட்டம் & 1956-7வது சட்டத்திருத்தப்படி ஜம்மு-காஷ்மீர் Part-B மாநில அந்தஸ்திலிருந்து, மாநில அந்தஸ்தை பெற்றது.
- குடியரசு தலைவர் அம்மாநிலத்தின் ஒப்புதல் பெற்று Art 370 ஐ சில மாற்றங்களுடன் நிறுத்தி வைக்கலாம்.

### ஜம்மு-காஷ்மீர் அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்

- நீதி, சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகியவற்றில் பாதுகாப்பை வழங்குகிறது.
- 14.05.1954-க்கு முன் ஜம்மு-காஷ்மீரில் நிரந்தரமாக வசித்தவர்களுக்கு நிரந்தர வசிப்பாளர்(Permanent Resident) உரிமையை வழங்கியது.
- இந்திய அரசியலமைப்பின் Art-I ஜம்மு காஷ்மீர்க்கும் பொருந்தும்.
- ஜம்மு-காஷ்மீர் மாநிலம் என்பது ஆசாத் காஷ்மீரையும் உள்ளடக்கியது எனக் குறிப்பிடுகிறது. 1948-ல் பாகிஸ்தான் கைப்பற்றிய காஷ்மீர் என அழைக்கப்படுகிறது.
- Part-VI(மாநில அரசு), PartVII(5வது அட்டவணை) & 6வது அட்டவணை ஜம்மு-காஷ்மீர்க்கு பொருந்தாது.
- இந்திய அரசியலமைப்பின் Part III-ல் இம்மாநிலத்திற்கு சில விதிவிலக்குகள் வழங்கப்பட்டுள்ளது.
- Art 19(1)F&Art 31-ல் இம்மாநிலத்தில் மட்டும் நடைமுறையில் உள்ளது.{சொத்துரிமை அடிப்படை உரிமையாக உள்ளது}
- இம்மாநில குடிமக்களுக்கு மட்டும் சொத்துரிமை, குடியுரிமை, வேலைவாய்ப்பு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

- இம்மாநிலத்தில் மட்டும் இரட்டை குடியுரிமை(Dual Citizenship) உள்ளது.
  1. ஜம்மு-காஷ்மீர் அரசியலமைப்பின்படி மாநில குடியுரிமை
  2. இந்திய அரசியலமைப்பின்படி இந்திய குடியுரிமை
- பாராளுமன்ற தடுப்பு காவல் சட்டம் தொடர்பான இந்திய அரசியலமைப்பின் Art 22 இம்மாநிலத்திற்கு பொருந்தாது.
- இம்மாநில அரசியலமைப்பின்படியே, இரு அவை சட்டமன்றம்(Bicameral Legislature) (சட்டமேலவை, சட்டப்பேரவை) ஏற்படுத்தப்பட்டுள்ளது. (இந்திய அரசியலமைப்பின்படி ஏற்படுத்தப்படவில்லை)
- சட்டப்பேரவையின் பதவிக்காலம் - 6ஆண்டுகள் என நிர்ணயம் செய்துள்ளது.
- சட்டமேலவை உறுப்பினர் எண்ணிக்கை - 36
- சட்டப்பேரவை உறுப்பினர் எண்ணிக்கை 111, இதில் 24 தொகுதிகள் ஆசாத் காஷ்மீரில் உள்ளது.
- ஜம்மு-காஷ்மீர் மாநில அரசின் தலைவராக சதார்-இ-ரியசத் (Sadar-i-Riyasat) (குடியரசுதலைவர்) ஐ அறிவித்தது.
- மாநில அரசாங்க தலைவராக வாசிர்-இ-ஆசம்(Wazir-i-Azam) (குடியரசுதலைவர்) ஐ அறிவித்தது.
- 1966 சதார்-இ-ரியசத் ன் பெயர் ஆளுநர் என்றும், வாசிர்-இ-ஆசமின் பெயர் முதலமைச்சர் என்று மாற்றப்பட்டது.
- உருதை மாநில ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டது. உருது-உடன் சேர்த்து ஆங்கிலத்தையும் பயன்படுத்த அனுமதித்தது.
- இம்மாநில அரசியலமைப்பை 2/3 சிறப்பு பெரும்பான்மை மூலம் மட்டுமே திருத்த இயலாது.
- மத்தியப்பட்டியல், மாநிலப்பட்டியல் தவிர எஞ்சிய அதிகாரங்கள் மாநில அரசிடம் இருக்கும். பொதுப்பட்டியல் இம்மாநிலத்திற்கு பொருந்தாது.
- ஜம்மு-காஷ்மீர் மத்திய அரசு உடனான உறவுகளை திருத்த இயலாது.
- இம்மாநில சட்டமன்ற ஒப்புதல் இன்றி இந்திய அரசியலமைப்பின் Art 3படி எல்லைகள், பெயர், பரப்பளவை திருத்த இயலாது.
- இம்மாநில முதலமைச்சரை கலந்தாலோசித்த பின்னரே குடியரசு தலைவர் ஆளுநரை நியமிக்க முடியும். (ஆயுத கிளர்ச்சி காரணத்திற்காக இம்மாநிலத்தில் தேசிய நெருக்கடி அறிவிக்க இயலாது)
- இம்மாநிலத்தில் மட்டும் 2 வகையான மாநில நெருக்கடி பயன்படுத்தப்படுகிறது.
  1. இந்திய அரசியலமைப்பு சட்டம் Art 356 குடியரசுதலைவர் ஆட்சி(President Rule)
  2. ஜம்மு-காஷ்மீர் அரசியலமைப்புச்சட்டம் Art 92படி ஆளுநர் ஆட்சி(Governor Rule)
- ஆளுநர் ஆட்சிக்கு அம்மாநில ஆளுநர் குடியரசு தலைவரின் ஒப்புதலை பெற வேண்டும். அதிகபட்சம் 6 மாதத்திற்கு மட்டுமே அறிவிக்க வேண்டும்.
- 1977-ல் முதன் முதலில் ஆளுநர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது.

- 1986-ல் முதன் முதலில் குடியரசுதலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது.
- இந்திய அரசு மேற்கொள்ளும் சர்வதேச ஒப்பந்தம், உடன்படிக்கைகள், அம்மாநில சட்டமன்றத்தின் ஒப்புதல் பெற்ற பின்னரே அம்மாநிலத்திற்கு நடைமுறைக்கு வரும்.
- நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் சட்ட திருத்தங்கள் இம்மாநிலத்திற்கு பொருந்தாது. குடியரசு தலைவர் அச்சட்ட திருத்தம் ஜம்மு-காஷ்மீர்க்கும் பொருந்தும் என அறிவிக்க வேண்டும்.
- ஜீன் 26. 2000-ல் ஜம்மு காஷ்மீர் சட்டமன்றத்தில் அம்மாநிலத்திற்கு தன்னாட்சி அந்தஸ்து கோரி தன்னாட்சி தீர்மானம் (J & K Autonomy Resolution) நிறைவேற்றம்.
- ஜீலை 14, 2000-ல் மத்திய அமைச்சரவை (கேபினட்) இத்தீர்மானத்தை நிராகரித்தது.
- 2010-ல் மத்திய அரசு ஜம்மு-காஷ்மீருக்காக திலீப் ப்ட்கோன்சர் தலைமையில் ராதாகுமார், ஆ.ஆ.அன்சாரி ஆகியோரை உறுப்பினராகக் கொண்ட 3 நபர் குழுவை(Group of Interlocutors for J & K) அமைத்தது.
- இக்குழு 2011, அக்டோபரில் மத்திய அரசிடம் அறிக்கை அளித்தது.

**Art 371**

- மகாராஷ்டிரா & குஜராத் மாநிலத்திற்கான சிறப்பு உரிமைகள் பற்றி குறிப்பிடுகிறது.(Special provisions with respect to State of Maharastra & Gujarat.)

**Art 371A**

- நாகலாந்து மாநிலத்திற்கான சிறப்பு உரிமைகள்(Special Provision with respect to the State of Nagaland) பற்றி குறிப்பிடுகிறது.
- 1962-13 வது சட்டத்திருத்தப்படி Art 371A சேர்க்கப்பட்டது.
- நடைமுறை: 1963

**Art 371B**

- அசாம் மாநிலத்திற்கான சிறப்பு உரிமைகள் (Special Provision with respect of the State) பற்றி குறிப்பிடுகிறது.
- 1969-22 வது சட்டத்திருத்தப்படி Art 371B சேர்க்கப்பட்டது.

**Art 371C**

- மணிப்பூர் மாநிலத்திற்கான சிறப்பு உரிமைகள்(Special Provision with respect to the State of Manipur) பற்றி குறிப்பிடுகிறது.
- 1971-27வது சட்டத்திருத்தப்படி Art 371C சேர்க்கப்பட்டது.

**Art 371D**

- ஆந்திரப்பிரதேச (தெலுங்கானா பகுதிக்கு) சிறப்பு உரிமைகள்(Special Provision with respect to the State of Andra Pradesh) பற்றி குறிப்பிடுகிறது.

- 1973-32வது சட்டத்திருத்தப்படி Art 371D சேர்க்கப்பட்டது.

**Art 371E**

- ஆந்திர பிரதேசத்தில் மத்திய பல்கலைக்கழகம் ஏற்படுத்துவது பற்றி குறிப்பிடுகிறது. (Establishment of Central University of Andrapradesh)
- 1973-32வது சட்டத்திருத்தப்படி Art 371E சேர்க்கப்பட்டது.

**Art 371F**

- சிக்கிம் மாநிலத்திற்கான சிறப்பு உரிமைகள்(Special Provision with respect to the State of Sikkim) பற்றி குறிப்பிடுகிறது.
- 1975-36வது சட்டத்திருத்தப்படி Art 371F சேர்க்கப்பட்டது.

**Art 371G**

- மிசோராம் மாநிலத்திற்கான சிறப்புரிமைகள்(Special Provision with respect to the State of Mizoram) பற்றி குறிப்பிடுகிறது.
- 1986-53வது சட்டத்திருத்தப்படி Art 371G சேர்க்கப்பட்டது.
- நடைமுறை: 1987

அரசியல் சட்டப்பிரிவு 371A முதல் 371 G வரையிலான பிரிவுகளில் எந்த மாற்றங்களை செய்வதாக இருந்தாலும் அந்தந்த மாநிலங்களின் ஒப்புதலை பெற்றாக வேண்டும்.

**Art 371H**

- அருணாச்சல பிரதேச மாநிலத்திற்கான சிறப்பு உரிமைகள்(Special Provision with respect to the State of Arunachal Pradesh) பற்றி குறிப்பிடுகிறது.
- 1986-55வது சட்டத்திருத்தப்படி Art 371H சேர்க்கப்பட்டது.

**Art 371I**

- கோவா(Goa) மாநிலத்திற்கான சிறப்பு உரிமைகள்(Special Provision with respect to the State of Goa) பற்றி குறிப்பிடுகிறது.
- 1987-56வது சட்டத்திருத்தப்படி Art 371I சேர்க்கப்பட்டது.

**Art 371J**

- கர்நாடகா மாநிலத்திற்கான சிறப்பு உரிமைகள்(Special Provision with respect to the State of Karnataka) பற்றி குறிப்பிடுகிறது.
- 2012-98வது சட்டத்திருத்தப்படி Art 371J சேர்க்கப்பட்டது.

**Art 372**

- முந்தைய சட்டங்களை நடைமுறைப்படுத்துவது(Continuance in force of existing Laws and their adaptation) பற்றி குறிப்பிடுகிறது.

**Art 372A**

- குடியரசு தலைவர் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரங்கள் (Power of President to adapt laws) பற்றி குறிப்பிடுகிறது.
- 1956-7வது சட்டத்திருத்தப்படி Art 372A சேர்க்கப்பட்டது.

**Art 373**

- குடியரசு தலைவர் குறிப்பிட்ட நிகழ்வுகளில் நபர்களை தடுப்பு காவல் சட்டங்களின் கீழ் கைது செய்ய ஆணை பிறப்பிப்பது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 375**

- நீதிமன்றங்கள், அதிகாரம் பெற்ற அமைப்புகள், அலுவலர்கள் தங்கள் பணிகளை மேற்கொள்ள அரசியலமைப்பு சட்டப்படி சிறப்புரிமைகள் வழங்குவது பற்றி குறிப்பிடுகிறது.

**Art 376**

- உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கான சிறப்புரிமைகள் பற்றி குறிப்பிடுகிறது. (Provision as to judge of highcourt)

**Art 377**

- CAG-க்கான சிறப்புரிமைகள் பற்றி குறிப்பிடுகிறது.(Provisions as to CAG)

**Art 378**

- அரசு பணியாளர் தேர்வாணையங்களுக்கான சிறப்பு உரிமைகள் பற்றி குறிப்பிடுகிறது. (Provision as to Public Service Commissions)

**Art 378A**

- ஆந்திரபிரதேச சட்டப்பேரவை பதவி காலத்திற்கான சிறப்புரிமைகள் பற்றி குறிப்பிடுகிறது. (Special Provision as to duration of Andra Pradesh Legislative Assembly)

**Art 379-392** வரை தற்போது நீக்கப்பட்டுள்ளது.

**ஜம்மு - காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து நீக்கம்**

ஜம்மு-காஷ்மீர் மறுசீரமைப்பு மசோதா மாநிலங்களவையில் 2019 ஆகஸ்ட் 5ஆம் தேதியும், மக்களவையில் ஆகஸ்ட் 6ஆம் தேதியும் மத்திய அரசு நிறைவேற்றியது. அதன்படி ஜம்மு-காஷ்மீர் பகுதியை சட்டசபையுள்ள யூனியன் பிரதேசமாகவும், லடாக் பகுதியை சட்டசபையற்ற யூனியன் பிரதேசமாகவும் மத்திய அரசு அறிவித்தது. இச்சட்டம் 2019 அக்டோபர் 31ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.

இந்த மறுசீரமைப்பிற்குப் பின்

* ஜம்மு-காஷ்மீரின் முதல் துணைநிலை ஆளுநர் - கிரிஷ் சந்திர முர்முர்
* லடாக்கின் துணைநிலை ஆளுநர் - R.K. மாத்தூர்

## சட்டம் சாரா அமைப்புகள்

### திட்டக்குழு (Planning Committee)

- திட்டக்குழுவானது கே.சி. நியோகி கமிட்டியின் (1946) பரிந்துரையின் பேரில் மார்ச் 15, 1950ல் ஏற்படுத்தப்பட்டது.
- இந்திய அரசின் அமைச்சரவை குழு தீர்மானத்தின் மூலம் உருவாக்கப்பட்டது.
- திட்டக்குழுவை உருவாக்கியவர் **ஜவஹர்லால் நேரு** ஆவார்.
- இது அரசியல் அமைப்பினால் உருவாக்கப்பட்ட அமைப்போ, சட்டத்தினால் உருவாக்கப்பட்ட அமைப்போ அல்ல. இது ஒரு ஆலோசனை அமைப்பாகும்.

**அமைப்பு:**

- தலைவர் - இந்தியப் பிரதமர் (பதவியின் பெயரில்)
- **துணைத்தலைவர்:**
  - ➢ திட்டக்குழு முழுநேரமும் பணியாற்றும் துணைத்தலைவரைக் கொண்டுள்ளது. இவரே திட்டக்குழுவின் உண்மையான நிர்வாகத் தலைவராக விளங்குகிறார்.
  - ➢ துணைத்தலைவர் அமைச்சரவையால் நியமிக்கப்படுகிறார். எனினும், இவர் அமைச்சரவையில் உறுப்பினர் இல்லை. அதன் கூட்டங்களில் வாக்குரிமை ஏதுமின்றி கலந்து கொள்ளலாம்.
  - ➢ துணைத்தலைவர் ஐந்தாண்டுத் திட்ட வரைவு அறிக்கையை உருவாக்குவதற்கும் அதனை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கும் பொறுப்புடையவர் ஆவார்.
- **உறுப்பினர்கள்:**
  - ➢ 4 முதல் 7 வரையிலான முழுநேரம் பணியாற்றும் நிபுணர்கள் இடம் பெறுகின்றனர். இவர்கள் மாநில அமைச்சர் அந்தஸ்தைப் பெற்றுள்ளனர்.
  - ➢ மத்திய அரசின் சில அமைச்சர்கள் இதன் பகுதி நேர உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர். உள்துறை, நிதி, பாதுகாப்பு மற்றும் மனிதவள மேம்பாடு ஆகிய அமைச்சர்கள் பதவி வழி உறுப்பினராக நியமிக்கப்படுகின்றனர்.
  - ➢ **செயலர்:** இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த ஒருவர் செயலராக நியமிக்கப்படுகிறார்.

**பணிகள்:**

- ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்குதல்.
- நாட்டில் உள்ள பொருள், மூலவளங்கள், மனிதவளங்களை அளவிடுதல் மற்றும் அவற்றை மேம்படுத்தும் வழிகளை ஆராய்தல்.
- நாட்டின் வளங்களை பயனுள்ள முறையில், சரிசமமாக பயன்படுத்துவதற்கான திட்டத்தை உருவாக்குதல்.
- பொருளாதார மேம்பாட்டை தடை செய்யும் காரணிகளைக் கண்டறிந்து தெரிவித்தல்.

- முன்னேற்றங்களை ஆய்வு செய்து தேவையான மாற்றங்களைப் பரிந்துரைத்தல்.
- மத்திய, மாநில வளர்ச்சித் திட்டங்களை தயாரித்தல்.
- தொழில் வளர்ச்சிக்கான திட்டமிடுதல்.
- தொலைநோக்குத் திட்டமிடுதல்.
- யோஜனா திட்டம் பத்திரிக்கை மூலம் திட்டத்தகவல்களைத் தருதல்.

- திட்டக்குழு ஆகஸ்ட் 13, 2014ல் கலைக்கப்பட்டது.
- 2014ம் ஆண்டு பிரதமரின் சுதந்திர தின உரையில் திட்டக்குழுவுக்கு மாற்றாக ஒரு அமைப்பு உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
- திட்டக்குழுவிற்கு மாற்று அமைப்பாக நிதி ஆயோக் என்ற அமைப்பு ஜனவரி 1, 2015ல் உருவாக்கப்பட்டது.
- திட்டக்குழுவின் முதல் தலைவர் - **ஜவஹர்லால் நேரு.**
- திட்டக்குழுவின் கடைசி தலைவர் - **நரேந்திர மோடி.**
- திட்டக்குழுவின் முதல் துணைத்தலைவர் - **குல்சாரிலால் நந்தா.**
- திட்டக்குழுவின் கடைசி துணைத்தலைவர் - **மாண்டேக் சிங் அலுவாலியா.**

## தமிழ்நாடு திட்ட ஆணையம்

- இது 25.5.1971ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- **நோக்கம்:** மாநில வளர்ச்சித் திட்டத்திற்கு செயல் வடிவம் கொடுப்பது.
- **தலைவர்:** மாநில முதலமைச்சர்
- துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் நியமிக்கப்படுகிறார்கள்.
- இதன் துணை தலைவர் நிர்வாக பணிகளை மேற்கொள்கிறார்.
- **தலைமையகம்:** சென்னை.

## தேசிய வளர்ச்சிக் குழு (National Development Council)

- தேசிய வளர்ச்சிக் குழு ஆகஸ்ட் 6, 1952ல் அமைக்கப்பட்டது.
- முதல் ஐந்தாண்டுத் திட்ட வரைவு அறிக்கையின் பரிந்துரையின் பேரில் உருவாக்கப்பட்டது.
- இது அரசியலமைப்பாலோ அல்லது பாராளுமன்றச் சட்டத்தாலோ உருவாக்கப்படாமல், அமைச்சரவைக்குழு தீர்மானத்தின் பேரில் உருவாக்கப்பட்டது.
- இது ஆலோசனை அமைப்பு மட்டுமே, இதன் பரிந்துரைகள் பாராளுமன்றத்தைக் கட்டுப்படுத்தாது.
- இது ஆகஸ்ட் 2016ல் கலைக்கப்பட்டு நிதி ஆயோக் உடன் இணைக்கப்பட்டது.

**அமைப்பு:**

- **தலைவர்** - இந்தியப் பிரதமர்
- **உறுப்பினர்கள்:**
  - ➢ மத்திய அரசின் அனைத்து கேபினெட் அமைச்சர்களும் இதில் இடம் பெறுபவர் (1967-க்கு பின்பு).
  - ➢ எல்லா மாநில முதலமைசசர்களும் இடம் பெறுவர்.
  - ➢ யூனியன் பிரதேசங்களின் முதலமைச்சர்கள் அல்லது துணை ஆளுநர்களும் இடம் பெறுவர்.
  - ➢ திட்டக்குழு உறுப்பினர்களும் இதில் பங்கு பெறுவர்.
- **செயலர்:**
  - ➢ திட்டக்குழுவின் செயலரே தேசிய வளர்ச்சிக் குழுவின் செயலராகவும் திகழ்வார். நிர்வாக உதவி மற்றும் ஏனைய உதவிகளையும் அவர் வழங்குவர்.

**குறிக்கோள்கள்:**

- திட்டங்களை நிறைவேற்றுவதில் மாநில அரசின் ஒத்துழைப்பை பெறுதல்.
- தேசத்தின் வளம் மற்றும் முயற்சி ஆகியவற்றை திட்டத்திற்கு ஆதரவாகத் திரட்டுதல்.
- எல்லா முக்கியமான துறைகளுக்கும் பொதுவான பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குதல்.
- நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் விரைவான மற்றும் சமச்சீரான வளர்ச்சியை உறுதிப்படுத்துதல்.

**பணிகள்:**

- திட்டக்குழு தயாரித்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுத்தல்.
- திட்டக்குழு ⟶ கேபினட் ⟶ தேசிய வளர்ச்சிக்குழு ⟶ பாராளுமன்றம் என்ற படிநிலையில் ஐந்தாண்டுத் திட்டம் ஒப்புதல் பெறப்படுகிறது.
- தேசியத் திட்டத்தை உருவாக்குவதற்கான வழிமுறைகளை உருவாக்கி வழங்குதல்.
- திட்டக்குழு தயாரித்த தேசியத் திட்டத்தை ஆய்வு செய்தல்.
- திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான வளங்களை அளவிடுதல் மற்றும் அவற்றை அதிகரிப்பதற்கான வழிகளை ஆய்வு செய்தல்.
- பொருளாதார கொள்கைகளை உறுதி செய்தல்.
- தேசிய வளர்ச்சிக்குழு ஆண்டிற்கு 2 முறை கூட்டப்பட வேண்டும்.

## நிதி ஆயோக் (NITI Aayog)

- மாநில அரசாங்கங்கள் மற்றும் ஒன்றிய பகுதிகளின் பொருளாதார பிரதிநிதித்துவத்திற்கான அமைப்பு நிதி ஆயோக் ஆகும்.
- NITI - National Institution for Transforming India.
- அமைச்சரவைக்குழு தீர்மானத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. இது ஆலோசனை அமைப்பு ஆகும்.

- 2014ம் ஆண்டு பிரதமரின் சுதந்திர தின உரையில் திட்டக்குழுவுக்கு மாற்றாக நிதி ஆயோக் அமைப்பு உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
- மார்ச் 15, 1950 முதல் செயல்பாட்டில் உள்ள திட்டக்குழுவிற்கு பதிலாக நிதி ஆயோக் ஆரம்பிக்கப்பட்டது.
- இது திட்டக்குழுவிற்கு மாற்றாக கொள்கைகளை தீர்மானிக்கும் அமைப்பு ஆகும்.
- சமஸ்கிருதத்தில் ராஷ்டிரிய பரிவர்த்தன் சான்ஸ்தா என்று அழைக்கப்படுகிறது. இதன் பொருள் இந்தியாவை மாற்றும் தேசிய நிறுவன சிந்தனைக் களம்.
- மத்திய கொள்கைக் குழு மற்றும் அரசாங்கத்தின் சிந்தனைக் களஞ்சியம் (**Think-tank**) என்று அழைக்கப்படுகிறது.
- அஜய் சிப்பர் கமிட்டியின் பரிந்துரையின்படி நிதி ஆயோக் ஜனவரி 1, 2015 அன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.
- நிறுவியவர் - பிரதமர் நரேந்திர மோடி
- தலைமையிடம் - நியூடெல்லி.

**அமைப்பு:**

- **தலைவர்** - பிரதமர்.
- **ஆட்சி மன்ற சபை:-**
  - அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்கள்
  - சட்டமன்றங்களை உடைய யூனியன் பிரதேசங்களின் முதலமைச்சர்கள்
  - யூனியன் பிரதேசங்களில் துணைநிலை ஆளுநர்கள்.
- மத்தியில் பிராந்திய கவுன்சில்களையும் உருவாக்கிக் கொள்ளலாம்.
- ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களில் ஏற்படும் பிரச்சனைகளைச் சமாளிக்கலாம்.
- வல்லுநர்கள், நிபுணர்கள் சிறப்பு அழைப்பாளராக நியமிக்கும் அதிகாரம் பிரதமருக்கு உள்ளது.

**முழுநேர அமைப்பு:**

- முழுநேர துணைத்தலைவர் - 1.
- முழுநேர உறுப்பினர் - 3 - மாநிலத்தின் அமைச்சர் அந்தஸ்து வழங்கப்படும்.
- பகுதி நேர உறுப்பினர்கள் - 2 (முன்னணி பல்கலைக்கழக உறுப்பினர் ஆராய்ச்சி நிறுவனங்கள் உறுப்பினர் மற்றும் பிற) - சுழற்சி முறையில்
- நிதி ஆயோக்கின் துணைத்தலைவர் மற்றும் முதன்மைச் செயல் அதிகாரி பிரதமரால் நியமனம் செய்யப்படுகிறார்கள்.
- துணைத்தலைவருக்கு கேபினெட் அமைச்சர் அந்தஸ்து வழங்கப்படும்.
- ஒன்றிய கவுன்சிலிருந்து 4 மத்திய அமைச்சர்கள் பிரதமரால் நியமிக்கப்படுவார்கள்.

**நிதி ஆயோக் இலக்குகள்**

கூட்டுறவு கூட்டாட்சியை முன் விலைப்படுத்துதல் அரசுகளின் தீவிர ஈடுபாடு

கிராம அளவிலான மேம்பாட்டிற்கான திட்டங்களை உயர் அளவில் ஒருங்கிணைத்தல்

பொருளாதார வளர்ச்சியிலிருந்து உரிய பயன்களை பெற இயலாத பிரிவினருக்கு சிறப்பு கவனம்.

தேசிய பாதுகாப்பு நலன்களை ஒருங்கிணைக்கும் பொருளாதாரக் கொள்கை

தொடர்படைப்பாக்க மேம்பாடுகளுக்கான பின்னூட்டம்.

பங்குதாரர்களாக தேசிய மற்றும் சர்வதேச சிந்தனையாளர்கள்.

அறிவு, படைப்பாக்கம் மற்றும் தொழில் முனைவோர் ஆதரவு அமைப்பை உருவாக்குதல்.

பிரிவுகள் மற்றும் துறைகளுக்குள் எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் மேடை

நல்ல ஆளுகை வழங்குவதற்கான ஆய்வுக்கான மிகச்சிறந்த வளமையம்.

தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தகுதிப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல்.

நிதி ஆயோக் அமைப்பு

↓

தலைவர் (பிரதமர்)

↓

துணைத்தலைவர் (பிரதமரால் நியமிக்கப்படுகிறார்)

↓

தலைமை நிர்வாக அதிகாரி (பிரதமரால் நியமிக்கப்படுகிறார்)

- முழுநேர உறுப்பினர்கள்
- பகுதி நேர உறுப்பினர்கள் (அதிகபட்சம் 2)
  உரிய நிறுவனங்களிலிருந்து தேர்வு செய்யப்படுகிறார்கள்
- அலுவல்சாரா உறுப்பினர்கள் (அதிகபட்சம் 4)
  மத்திய அமைச்சரவையிலிருந்து பிரதமரால் நியமிக்கப்படுகிறார்

**ஆளுநர் குழு**

முதலமைச்சர்கள் மற்றும் ஒன்றிய துணை ஆளுநர்கள்

**மண்டலக் குழு**

அம்மண்டல முதலமைச்சர்கள் மற்றும் துணை நிலை ஆளுநர்கள்

**குறிப்பிட்ட துறைகளின்**

நிபுணர்கள், வல்லுநர்கள், துறை வல்லுநர்கள்

| நிறுவன அமைப்பின் வேறுபாடுகள் | | |
|---|---|---|
| | **நிதி ஆயோக்** | **திட்ட ஆணையம்** |
| **தலைவர்** | பிரதமர் | பிரதமர் |
| **துணைத்தலைவர்** | பிரதமரால் நியமிக்கப்படுகிறார் | துணைத் தலைவர், கேபினட் அமைச்சர் தகுதி கொண்ட ஒருவர் நியமிக்கப்படுவார். |

| | | |
|---|---|---|
| **ஆளுநர் குழு** | முதலமைச்சர்களும் மற்றும் துணை நிலை ஆளுநர்கள் | தேசிய வளர்ச்சிக் குழு |
| **உறுப்பினர் செயலர்** | பிரதமரால் நியமிக்கப்படும் இவர் தலைமை நிர்வாக அதிகாரி என்று அழைக்கப்படுகிறார் | செயலர்கள் அல்லது உறுப்பினர் செயலர்கள் வழக்கமான செயல் முறைகளின் கீழ் நியமிக்கப்படுகிறார்கள். |
| **பகுதிநேர உறுப்பினர்கள்** | தேவையைப் பொறுத்து அவ்வப்போது பகுதி நேர உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர் | திட்ட ஆணையத்தில் பகுதி நேர உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கான பகுதி வழங்கப்படவில்லை |
| **முழு நேர உறுப்பினர்கள்** | திட்ட ஆணையத்தை விட குறைவான எண்ணிக்கையில் முழுநேர உறுப்பினர்கள் எண்ணிக்கையில் இருக்கும் | கடைசி திட்ட ஆணையத்தில் எட்டு முழு நேர உறுப்பினர்கள் இருந்தனர். |

**நோக்கம்:**

- **அடிப்படை நோக்கம்:**
  - நாட்டின் பொருளாதார முடிவெடுப்பதில் மாநில அரசுகளை ஈடுபடுத்தவும் பங்கேற்க செய்யவும் ஊக்கமளித்தல்.
- **சிறப்பு நோக்கம்:**
  - திட்டமிடும் போது கீழிருந்து மேல் நோக்கிய அணுகுமுறை. (நிதி ஆயோக்)
  - மேலிருந்து கீழ்நோக்கிய அணுகுமுறை. (திட்டக்குழு)
- ஒருங்கிணைந்த கூட்டாட்சித் தத்துவத்தை ஊக்குவித்தல்.
- மாநிலங்களை பொருளாதாரக் கொள்கைகள் உருவாக்கத்தில் பங்கு எடுக்க வைப்பது.
- மாநிலங்களுக்கும், மத்திய அரசுக்கும் தொழில்நுட்ப கொள்கைகளை வழங்குவது.

## நிதி ஆயோக் உறுப்பினர்கள் - 2020

- தலைவர் - பிரதமர் நரேந்திர மோடி
- துணைத்தலைவர் - ராஜீவ் குமார்
- முழுநேர உறுப்பினர்கள்
  - வினோத் பவுல் (பொது சுகாதார வல்லுநர்)
  - வி.கே. சரஸ்வத் (முன்னாள் DRDO தலைவர்)
  - ரமேஷ் சந்த் (விவசாய வல்லுநர்)
- செயலாளர் (CEO) - அமிதாப் காண்ட்
- பதவி வழி உறுப்பினர்கள்
  - அமித் ஷா (உள்துறை அமைச்சர்)
  - நிர்மலா சீதாராமன் (நிதித்துறை அமைச்சர்)
  - ராஜ்நாத் சிங் (பாதுகாப்புத்துறை அமைச்சர்)
  - நரேந்திர சிங் தோமர் (விவசாயத்துறை அமைச்சர்)

**குறிப்பு :**

- **நிதி ஆயோக் முதல் தலைவர் - நரேந்திர மோடி**
- நிதி ஆயோக் முதல் துணைத்தலைவர் - அரவிந்த் பனகாரியா
- நிதி ஆயோக் முதல் முதன்மைச் செயல் அதிகாரி - சிந்துஸ்ரீ குல்லர்.
- நிதி ஆயோக் முதல் கூட்டம் - பிப்ரவரி 8, 2015

## நிதி ஆயோக் - திட்டக்குழு ஓர் ஒப்பீடு

| நிதி ஆயோக் | திட்டக்குழு |
|---|---|
| ஆலோசனைக் குழு (அ) நீர்த்துப்போன அமைப்பு | நிதி ஒதுக்கீடு அதிகாரம் |
| நிதி ஒதுக்கீடு இல்லை | நிதி ஒதுக்கீடு இருந்தது |
| கூட்டாட்சி தத்துவத்திற்காக முதலமைச்சரவையும், துணை நிலை ஆளுநரையும் சேர்த்து உருவாக்கப்பட்டுள்ளது.<br>மேலும் NDC அமைப்பு இல்லை | கூட்டாட்சி நிலை இல்லை. ஆனால் NDC அமைப்பு இருந்தது. |
| CEO வை நியமிப்பவர் பிரதமர் | CEO பதவியே இல்லை. |
| பகுதி நேர உறுப்பினர்கள் இருந்தனர். | பகுதி நேர உறுப்பினர்களே இல்லை. |

| | |
|---|---|
| கொள்கைகளை உருவாக்குவதில் மாநிலங்களுக்கு பங்கு உண்டு | ஆனால் இங்கு இல்லை. |
| பிராந்திய கவுன்சிலை உருவாக்க அனுமதி உண்டு | இங்கு இல்லை. |

## தேசிய மனித உரிமை ஆணையம்(National Human Rights Commission - NHRC)

- மனித உரிமை பாதுகாப்புச் சட்டம் (Protection of Human Rights Act) 1993-ல் இயற்றப்பட்டது.
- இச்சட்டம் 2006-ல் திருத்தப்பட்டது.
- மனித உரிமை பாதுகாப்பு சட்டம் - 1993ன்படி அக்டோபர் 12, 1993ல் தேசிய மனித உரிமை ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.(தலைமையகம் - டெல்லி)
- இந்தியாவில் மனித உரிமைகளின் பாதுகாவலனாக (Watch dog of Human Rights) செயல்படும் இவ்வாணையம் ஒரு சட்டப்பூர்வமான அமைப்பு(Statutory Body)
- இவ்வாணையம் ஒரு பல உறுப்பினர் கொண்ட அமைப்பு(Multimembers Body)
- இது 1 தலைவர் மற்றும் 4 உறுப்பினர்களை கொண்டது.

**தேர்வுக்குழு:**

- பிரதமர், மக்களவை சபாநாயகர், மாநிலங்களவை துணைத்தலைவர், மக்களவை மற்றும் மாநிலங்களவை எதிர்கட்சித் தலைவர்கள், மத்திய உள்துறை அமைச்சர் ஆகிய 6 பேர் அடங்கிய குழுவின் பரிந்துரைப்படி குடியரசு தலைவர், ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை நியமிப்பார்.
- பதவியில் இருக்கும் உச்சநீதிமன்ற நீதிபதியை அல்லது உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியை உறுப்பினராக நியமிக்கும் போது குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை கலந்தாலோசிப்பார்.
- தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் - நீதிபதி அருண்குமார் மிஷ்ரா.

**தகுதிகள்:**

- **தலைவர்:** ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருக்க வேண்டும்.
- **1-வது உறுப்பினர்:** உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்தவர் அல்லது இருப்பவர்.
- **2-வது உறுப்பினர்**: உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்தவர் அல்லது இருப்பவர்.

- **3-வது மற்றும் 4-வது உறுப்பினர்:** மனித உரிமைகள் தொடர்பான நடைமுறை அறிவு மற்றும் அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். இவர்களைத் தவிர,
- 1. தேசிய சிறுபான்மையினர் ஆணைய தலைவர்(Chairman of the National Commission for Minorities)
- 2. தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத் தலைவர்(Chairman of the National Commission for SC's)
- 3. தேசிய பழங்குடியினர் ஆணையத் தலைவர்(Chairman of the National Commission for STs)
- 4. தேசிய மகளிர் ஆணையத்தலைவர்(Chairman of the National Commission for Women) ஆகியோர் பதவி வழி முழுநேர உறுப்பினர்களாக(Ex-Officio Members) செயல்படுவர்.
- தலைவர் மற்றும் உறுப்பினர்களின் சம்பளம் மற்றும் படிகளை மத்திய அரசு நிர்ணயிக்கும். ஆனால் இவர்களின் நியமனத்திற்கு பின் மாற்ற இயலாது.
- தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவி காலம் - 5ஆண்டுகள் அல்லது 70 வயது வரை.
- இவர்கள் மீண்டும் மறுநியமனத்திற்கோ அல்லது மத்திய மாநில அரசுப் பணிகளுக்கோ நியமிக்க தகுதியற்றவர்கள்.
- இவர்களை நொடிந்தவர் (அ) அனுமதியின்றி வேறுபதவி வகித்தல் (அ) குற்ற வழக்கில் ஈடுபடுதல் (அ) நீதிமன்றம் அவரை தகுதியற்றவராக அறிவித்தல் ஆகிய காரணங்களுக்காக குடியரசு தலைவர் பதவி நீக்கம் செய்வார்.
- தவறான நடத்தை (அ) தகுதியின்மை (Misbehaviour (or) Incapacity) ஆகிய காரணங்களுக்காக உச்சநீதிமன்றம் விசாரித்து அளிக்கும் அறிக்கையின்படி குடியரசுத்தலைவர் பதவி நீக்கம் செய்வார்.
- இவ்வாணையம் சிவில் நீதிமன்றத்திற்கு(Civil Court) இணையானது.
- இவ்வாணையம் பிரிவு அலுவலகங்களை இந்தியாவில் எந்த இடத்திலும் ஏற்படுத்தலாம்.
- இவ்வாணையத்தின் முதன்மை (அ) தலைமை நிர்வாக அலுவலர் - செயலாளர்.
- இவ்வாணையத்தின் புலனாய்வு அதிகாரி காவல்துறை இயக்குநர் அந்தஸ்தில் இருப்பார்.
- இவ்வாணையம் தன்னிச்சையாகவும் சுதந்திரமாகவும் தனது பணிகளை மேற்கொள்ளளும்.
- இவ்வாணையம் மனித உரிமை மீறல்கள் தொடர்பான புகார்களை விசாரித்து அறிக்கை மட்டுமே அளிக்கும், தண்டனை வழங்க இயலாது.
- அறிக்கை அளிக்க கால அளவு - 1மாதம்
- இவ்வாணையம் கூடும் இடத்தையும், நாளையும் தீர்மானிப்பவர் தலைவர்.

- ஆண்டறிக்கையை மத்திய அரசிடம் அளிக்கும். மத்திய அரசு ஆண்டறிக்கையை பாராளுமன்ற ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கும்.
- இவ்வாணையத்தின் விதிமுறைகள் 01.03.1994 ல் நடைமுறைக்கு வந்தது.
- இவ்வாணையம் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ்(Ministry of Home Affairs) இயங்குகிறது.

## மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம்: (CVC - Central Vigilance Commission)

- 1962-1964 சந்தானம் தலைமையிலான ஊழல் தடுப்பு குழுவின்(Committee on Prevention of corruption) பரிந்துரைப்படி 1964 பிப்ரவரியில் ஏற்படுத்தப்பட்டது.
- இக்குழு ஊழலை ஒழிக்க 137 பரிந்துரைகளை வழங்கியது.
- சந்தானம் குழுவின் பரிந்துரைப்படி பெரும்பாலான மாநிலங்களில் 1964-ல் மாநில ஊழல் கண்காணிப்பு ஆணையம் (SVC-State Vigilance Commission) ஏற்படுத்தப்பட்டது.
- CVC ஆரம்பத்தில் அரசியலமைப்பு சார்ந்த அமைப்பாகவோ அல்லது சட்டப்பூர்வ அமைப்பாகவோ இல்லை.
- 2003 செப்டம்பர் 11-ல் பாராளுமன்றம் மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணைய சட்டம்(Central Vigilance Commission Act) CVCக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம்(Statutory Status) அளித்தது.
- 2004 ஏப்ரலில் இந்திய அரசாங்கம் CVCஐ நிர்ணயிக்கப்பட்ட முகமையாக(Designated Agency) அறிவித்தது.
- CVC தற்போது மிக உயர்ந்த ஊழல் தடுப்பு அமைப்பாக(Apex vigilance Institution) உள்ளது.
- இது ஒரு பல் உறுப்பினர் அமைப்பு(Multi-Members Body)
- CVC,CBI மத்திய பணியாளர் அமைச்சகத்தின் கீழ்(Ministry of Personnel) இயக்குகின்றன.
- CVC தலைவராக ஒரு மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையர்(Central Vigilance Commissioner) மற்றும் 2ஊழல் கண்காணிப்பு ஆணையர்களைக்(Vigilance Commissioners) கொண்டது.
- இவர்களை பிரதமர் தலைமையில், உள்துறை அமைச்சர், லோக்சபா எதிர்கட்சித்தலைவர் ஆகிய 3 பேர் அடங்கிய குழுவின் பரிந்துரைப்படி குடியரசு தலைவர் நியமிப்பார்.
- மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையர் UPSC தலைவருக்கு இணையாகவும், ஊழல் கண்காணிப்பு ஆணையர்கள் UPSC உறுப்பினர்களுக்கு இணையான அதிகாரம் பெற்றுள்ளனர்.
- மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தின் தலைமையகம் - புதுதில்லி.

- இவர்களின் பதவி காலம் - 4ஆண்டுகள் (அ) 65 வயது வரை.
- இவர்கள் மறுநியமனத்திற்கு தகுதியற்றவர்கள். ஓய்விற்கு பின் மத்திய மாநில அரசுக் பணிகளுக்கும் நியமிக்க இயலாது.
- இவர்களை அனுமதியின்றி வேறுபதவி வகித்தல் (அ) நொடிப்பு நிலை அடைதல் (அ) மனநிலை பாதித்தல் (அ) குற்ற வழக்கில் ஈடுபடுதல் ஆகிய காரணங்களுக்காக குடியரசு தலைவர் பதவி நீக்கம் செய்வார்.
- தவறான நடத்தை (அ) தகுதியின்மை(Misbehaviour (or) Incapacity) ஆகிய காரணங்களுக்காக உச்சநீதிமன்றம் விசாரித்து அளிக்கும் அறிக்கையின்படி குடியரசுதலைவர் பதவிநீக்கம் செய்வார்.
- CVC தலைவரின் ஊதியம் மற்றும் படிகள் UPSC தலைவருக்கு நிகராக வழங்கப்படும்.
- மற்ற ஆணையர்களுக்கு UPSC ன் உறுப்பினர்களுக்கு நிகராக வழங்கப்படும்.
- CVC சட்டம் 2003ன்படி CBI இயக்குநரின் பதவிகாலம் 2 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டது.
- 1962-1964 சந்தானம் தலைமையிலான ஊழல் தடுப்பு குழுவின்(Committee on Prvention of Corruption) பரிந்துரைப்படி மத்திய புலனாய்வு அமைப்பு(Central Bureau of Investigation - CBI) 1963-ல் ஏற்படுத்தப்பட்டது.
- CBI,**The National Central Bureau of Interpol in India**என அழைக்கப்படுகிறது.
- இந்தியாவில் CVC,SVC,CBI ஆகியவை ஊழல் தடுப்பு அமைப்புகளாக உள்ளன.

**ஊழல் தடுப்புச் சட்டங்கள்:**

- பொதுப்பணியாளர்கள் (விசாரணை) சட்டம் (Public Servant(Enquiries) Act) - 1850
- இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penel Code) - 1860
- சிறப்பு காவல்படை சட்டம் (Special Police Establishment Act) - 1941
- டெல்லி சிறப்பு காவல்படைச் சட்டம் (Delhi Special Police Establishment) - 1946
- ஆணையங்கள் விசாரணை சட்டம் (Commissions of Inquiry) - 1952
- மத்திய சிவில் பணிகள்(நடத்தை) விதிகள் (Central Civil Service (Conduct) Rules) - 1964
- இரயில்வே பணிகள்(நடத்தை) விதிகள் (Railway Services (Conduct) Rules) - 1966
- அகில இந்திய பணிகள்(நடத்தை) விதிகள் (All India Service (Conduct) Rules) - 1968
- ஊழல் தடுப்பு சட்டம் (Prevention of Corruption Act) - 1988

**CVCயின் அதிகாரம் மற்றும் பணிகள்:**

- CVC ஊழல் தடுப்புச்சட்டம் 1988(Prevention of Corruption Act 1988) ன்படி மத்திய Group-A பணியாளர்கள் மற்றும் அகில இந்திய பணியாளர்கள் தொடர்பான ஊழல்களை விசாரிக்கும்.
- மத்திய அரசின் கீழ் உள்ள பொதுத்துறை மற்றும் நிதித்துறை நிறுவனங்களின் உயர் அலுவலர்கள் தொடர்பான ஊழல்களை விசாரிக்கும்.
- டெல்லி மாநகராட்சி மன்றமும், டெல்லி நகராட்சி குழுவும் CVCயின் அதிகார வரம்பிற்குட்பட்டவை.
- பொதுத்துறை வங்கிகளில்(Public Sector Banks)Scale-V க்கு மேல் உள்ள அலுவலர்கள்,RBI, NABARD, SIDBI ஆகியவற்றில் Grade-D க்கு மேல் உள்ள அலுவலர்கள், பொதுத்துறை நிறுவனங்களில் E7 & 8 க்கு மேல் உள்ள அலுவலர்கள்,GIC யில் manager க்கு மேல் உள்ள அலுவலர்கள் LIC யில் Senior Divisional Managerக்கு மேல் உள்ள அலுவலர்கள் ஆகியோர் தொடர்பான ஊழல்களை விசாரிக்கும்.
- மத்திய அமைச்சகங்களின் ஊழல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிடுகிறது.
- CVC ஊழல் தொடர்பாக நடவடிக்கை எடுக்க மத்திய அரசிற்கு ஆலோசனை அறிக்கை மட்டுமே அளிக்கும், தண்டனை வழங்க இயலாது. CVC சிவில் நீதிமன்றத்திற்கு(Civil Court) இணையானது.
- டெல்லி சிறப்பு காவல்படை சட்டம் 1946ன்படி (Delhi Special Police Establishment Act 1946) ஏற்படுத்தப்பட்ட டெல்லி சிறப்பு காவல்படைக்கு(Delhi Special Police Force) ஆலோசனைகள் வழங்குகிறது.
- CVC ஆண்டறிக்கையை குடியரசு தலைவரிடம் அளிக்கும். குடியரசு தலைவர் ஆண்டறிக்கையை பாராளுமன்ற ஒப்புதலுக்கு அனுப்பி வைப்பார்.
- CVC-27 விதமான ஊழல்களை கண்டறிந்து பட்டியலிட்டுள்ளது.

## லோக் அதாலத்(LOK ADALAT) (அ) மக்கள் நீதிமன்றங்கள்

- வழக்குகளை விரைவாகவும், அதிக செலவில்லாமலும் ஏழைகளுக்கு நீதி கிடைக்கவும் ஏற்படுத்தப்பட்டது.
- முதன் முதலில் குஜராத் மாநிலத்தில் ஜீனாகத் என்னுமிடத்தில் மார்ச் 4, 1982 லோக் அதாலத் ஆரம்பிக்கப்பட்டது.
- 1987(Legal Services Authorities Act) உரிமை பணிகள் சட்டம் இதற்கு சட்டபூர்வ அதிகாரம் அளிக்கிறது.
- லோக் அதாலத் மக்களின் பணம், நேரம், சக்தியை பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டது.
- லோக் அதாலத் நீண்டகாலம் தேங்கியிருக்கும் குற்ற வழக்குகளை தவிர மற்ற அனைத்து வழக்குகளையும் விசாரிக்கும்.
- லோக் அதாலத்-ன் சட்ட அதிகாரம் மாநில (அ) மாவட்ட அமைப்புகளால் தீர்மானிக்கப்படும்.

- லோக் அதாலத் Civil Court-க்கு இணையான அதிகாரம் பெற்றது.
- லோக் அதாலத்தின் தீர்ப்பை எதிர்த்து மேற்முறையீடு செய்ய இயலாது.
- லோக் அதாலத்தின் தலைவராக ஓய்வுபெற்ற நீதித்துறை அலுவலர் இருப்பார்.
- லோக் அதாலத்தின் உறுப்பினராக வழக்கறிஞர்கள், சமூக ஆர்வலர்கள் இருப்பர்.
- லோக் அதாலத் வழக்குகளை விரைவாகவும், அதிக செலவில்லாமலும் தீர்க்க ஏற்படுத்தப்பட்டது.
- பணம் தொடர்பான வழக்குகள்(Money Claim Disputes), திருமண வழக்குகள்(Matrimonial cases), பகிர்வு மற்றும் சொத்து தகராறுகளை லோக் அதாலத் விசாரிக்கும்.

**தீர்க்கப்படும் வழக்கு வகைகள்**

- காசோலை தொடர்பான வழக்குகள்.
- வாகன விபத்து வழக்குகள்.
- குடும்பப் பிரச்சனைகள் தொடர்பான வழக்குகள்.
- தொழில் தகராறுகள்.
- தொழிலாளர் தொடர்பான வழக்குகள்.
- குற்றவியல் வழக்குகளில் சமாதானம் ஏற்படுத்திக் கொள்ளத் தன்மையுள்ள வழக்குகள்.
- வங்கிக் கடன் பிரச்சினைகள்.
- வாடகை விவகாரங்கள்.
- விற்பனை வரி.
- வருமான வரி.
- மறைமுக வரி தொடர்பான பிரச்சினைகள்.
- 1996 அக்டோபர் 2ல் லோக் அதாலத் மூலம் 1 மில்லியன் வழக்குகளை தீர்க்க தேசிய அளவிலான திட்டம் கொண்டுவரப்பட்டது.
- தமிழ்நாட்டில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நிரந்தரமாக லோக் அதாலத் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- 2012-ல் தமிழ்நாடு அரசு அனைத்து மாவட்டங்களிலும் லோக் அதாலத் ஏற்படுத்த ஒப்புதல் அளித்தது.
- 23.112013ல் நாடு முழுவதும் தேசிய அளவில் லோக் அதாலத் நடத்தப்பட்டு வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் இவை விரைவு நீதிமன்றங்கள் என அழைக்கப்படுகிறது.

**இராணுவ தீர்ப்பாயம்:**

- இராணுவ பணியாளர்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும்.
- இதன் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றம் உட்பட எந்த நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்ய முடியாது.

- குடியரசு தலைவரிடம் மட்டுமே மேல்முறையீடு செய்ய முடியும்.
- இதன் நடவடிக்கைகளிலும் உச்சநீதிமன்றம் உடபட்ட எந்த நீதிமன்றமும் தலையிட முடியாது.

**ஓம்புட்ஸ்மேன்(OMBUDSMAN):**

- ஸ்கேண்டிநேவியன் அமைப்பான ஓம்புட்ஸ்மேன் 1809ல் சுவீடனில் ஏற்படுத்தப்பட்டது.
- ஓம்புட்ஸ்மேன் என்ற சொல் சுவீடன் சொல்லான ஆம்புட் என்ற சொல்லிருந்து தோன்றியது.
- அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆகியோர் தங்கள் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி ஊழல்களில் ஈடுபடுவதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் விசாரணை அமைப்பாகும்.
- மக்களாட்சி நாடுகளில் குடிமக்களின் குறைகளை தீர்க்க ஏற்படுத்தப்பட்டது.
- ஓம்புட்ஸ்மேன் இந்தியாவில் லோக்பால், லோக் ஆயுக்தா என அழைக்கப்படுகிறது.
- 1966-1970 ல் அமைக்கப்பட்ட மொரார்ஜி தேசாய் தலைமையிலான நிர்வாக சீர்திருத்த ஆணையம் இந்தியாவில் நியூசிலாந்தில் உள்ளதைப்போல் நீதித்துறை தலையிடாத லோக்பால் மற்றும் லோக்ஆயுக்தாவை ஏற்படுத்த பரிந்துரைத்தது.
- 1966 அக்டோபரில் நிர்வாக சீர்திருத்த ஆணையம் இடைக்கால அறிக்கை அளித்தது.
- 1966 ல் மத்திய அரசு மக்கள் குறைதீர்ப்பு ஆணையர்(Commissioner of Public Grievances) பதவியை ஏற்படுத்தியது.

**லோக்பால்(LOKPAL):**

- பிரதமர், மத்திய அமைச்சர்கள், மத்திய அரசு உயர் அலுவலர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் தொடர்பான புகார்களை விசாரிக்கும் சுதந்திரமான தன்னிச்சையான அமைப்பாகும்.
- LM சிங்வி - லோக்பால் என்ற வார்த்தையை 1963இல் அறிமுகம் செய்தார்.
- மொரார்ஜி தேசாய் குழுவின் பரிந்துரைப்படி 1968 மே 1971-ஏப்ரல், 1977-ஜீலை, 1985-ஆகஸ்டு, 1989-டிசம்பர், 1996-செப்டம்பர், 1998-ஆகஸ்டு, 2011-ஆகஸ்டு ஆகிய ஒன்பது முறை லோக்பால் மசோதா பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தி தோல்வி அடைந்தது.
- 2011 டிசம்பரில் 10-வது முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட லோக்பால் மசோதா டிசம்பர் 17, 2013ல் ராஜ்பசபாவிலும், டிசம்பர் 18, 2013 லோக்சபாவிலும் இம்மசோதா நிறைவேற்றப்பட்டது.
- குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்குப் பின் லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம் - 2013(LOKPAL and LIKAYUKTAS Act) 01.01.2014ல் நடைமுறைக்கு வந்தது.

- இச்சட்டம் வெளிநாட்டில் உள்ள (இந்தியாவிற்கு வெளியே உள்ள) இந்திய பொதுப்பணியாளர்களுக்கும்(Indian Public Servants) பொருந்தும்
- லோக்பால் அமைப்பின் நோக்கம் பொதுப்பணிகளில் ஊழலை ஒழிப்பது மற்றும் பிரதம அமைச்சர் உள்ளிட்ட பொதுப்பணியாளர்களை பொறுப்பேற்க செய்தல் ஆகும்.
- லோக்பால் அமைப்பின் முதல் தலைவராக நீதியரசர் பினாகி சந்திர கோஷ்.

**இம்மசோதாவின் முக்கிய அம்சங்கள்:**

- மத்தியில் லோக்பால் அமைப்பும், மாநில அளவில் லோக் ஆயுக்தா அமைப்பும் ஏற்படுத்த வேண்டும்.
- 1 தலைவர் மற்றும் 8 உறுப்பினர்களைக் கொண்டது.
- தலைவர் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அல்லது உச்சநீதிமன்ற நீதிபதி அந்தஸ்தில் இருப்பார்.
- உறுப்பினர்களில் 50% நீதித்துறை சார்ந்தவர்களாக இருப்பர்.
- உறுப்பினர்களில் 50%,SC,ST,BC, சிறுபான்மையினர் மற்றும் மகளிராக இருப்பார்.
- தலைவர் உறுப்பினர்களை பிரதமர், மக்களவை சபாநாயகர், மக்களவை எதிர்கட்சி தலைவர், இந்திய தலைமை நீதிபதி (அல்லது) தலைமை நீதிபதியால் நியமிக்கப்படும் சட்ட வல்லுநர் ஆகியோரில் அடங்கிய குழுவின் பரிந்துரைப்படி குடியரசு தலைவர் நியமிப்பார்.
- தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவிகாலம்: 5 ஆண்டுகள் (அ) 70 வயது வரை.
- தலைவர் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு இணையாகவும், உறுப்பினர்கள் உச்சநீதிமன்ற நீதிபதிக்கு இணையாகவும் சம்பளம், படிகள், அதிகாரங்களை பெறுவர்.
- இவர்களின் சம்பளம் இந்திய தொகுப்பு நிதியில்(Consolidated Fund of India) இருந்து வழங்கப்படும்.
- லோக்பால் அதிகார எல்லைக்குள் அனைத்து பொதுப்பணியாளர்களும் (பிரதமர் உட்பட) கொண்டுவரப்படுபவர்.
- ஆண்டிற்கு 10 லட்சத்திற்கு மேல் வெளிநாட்டில் இருந்து நன்கொடை பெறும் நபர்களும் லோக்பால் விசாரணை வரம்பிற்குள் வருவர்.
- ஊழல் மூலம் பெறப்பட்ட சொத்துக்களை வழக்கு நிலுவையில் இருக்கும் போதே லோக்பால் பறிமுதல் செய்யும் அதிகாரம் பெற்றுள்ளது.
- லோக்பால் பரிந்துரைக்கும் வழக்குகளை CBI மற்றும் இதர புலனாய்வு அமைப்புகள் விசாரிக்கும்போது, அதனை கண்காணிக்கும் அதிகாரத்தை லோக்பால் பெற்றுள்ளது.
- லோக்பால் ஊழல் தடுப்பு சட்டம் 1988-ன்படி விசாரிக்க அதிகாரம் பெற்றுள்ளது.
- CBI இயக்குநரை, பிரதமர் தலைமையிலான உயர் அலுவலர்கள் குழு பரிந்துரைக்க வேண்டும்.

- உச்சநீதிமன்ற நீதிபதிகள், தேர்தல் ஆணையர்கள் லோக்பால் விசாரணை வரம்பிற்குள் இடம் பெறமாட்டார்கள்.
- லோக்பால் தனது ஆண்டறிக்கையை குடியரசுத் தலைவரிடம் அளிக்கும் குடியரசுத் தலைவர் ஆண்டறிக்கையை பாராளுமன்ற ஒப்புதலுக்கு அனுப்பி வைப்பார்.
- லோக்பால் விசாரணை வரம்பிற்குள் பிரதமர், மத்திய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மத்திய அரசின் Group A, B, C, Dஅலுவலர்கள் ஆகியோர் லோக்பால் விசாரணை வரம்பிற்குள் வருவர்.
- லோக்பால் Civil Court-ற்கு இணையான அதிகாரம் பெற்றது.
- லோக்பால் பரிந்துரைக்கும் வழக்குகளை விசாரிக்கும் CBI அலுவலர்களை லோக்பால் ஒப்புதல் பெற்ற பின்னரே பணிமாற்றம் செய்ய இயலும்.
- லோக்பால் சட்டம் நடைமுறைக்கு வந்த 365 நாட்களுக்குள்(1 ஆண்டிற்குள்) மாநிலங்களில் லோக் ஆயுக்தா ஏற்படுத்த வேண்டும்.

**லோக்பால் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான தகுதிகள்:**

- ஊழல் எதிர்ப்பு கொள்கை(Anti Corruption Policy), நிர்வாகம்(Administration), ஊழல் தடுப்பு(Vigilance), இன்சூரன்ஸ், வங்கி சட்டம்(Law) மற்றும் மேலாண்மை(Management) ஆகிய ஏதாவது ஒரு துறையில் குறைந்தபட்சம் 25 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
- சட்டமன்ற (அ) நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கக் கூடாது.
- குறைந்தபட்சம் 45 வயது நிரம்பியிருக்க வேண்டும்.
- மத்திய மாநில அரசு பதவியில் பதவி நீக்கம் செய்யப்பட்டவராக இருக்கக் கூடாது.
- மத்திய மாநில அரசுகளில் ஆதாயம் தரும் பதவி வகிக்கக் கூடாது.

**லோக்பால் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவி நீக்கம்:**

- தலைவர் மற்றும் உறுப்பினர்களை தவறான நடத்தை காரணத்திற்காக உச்சநீதிமன்றம் விசாரித்து அளிக்கும் அறிக்கைப்படி குடியரசுதலைவர் பதவி நீக்கம் செய்வார்.
- நொடிப்புநிலை அடைதல், அனுமதியின்றி வேறுபதவி வகித்தல் ஆகிய காரணங்களுக்காகவும் குடியரசுதலைவரால் பதவி நீக்கம் செய்யப்படலாம்.

**லோக்ஆயுக்தா(LOKAYUKTA):**

- முதலமைச்சர், மாநில அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில அரசு உயர் அலுவலர்கள் தொடர்பான ஊழல்களை விசாரிக்கும் மாநில அளவிலான விசாரணை அமைப்பாகும்.
- மொரார்ஜி தேசாய் குழுவின் பரிந்தரையை ஏற்று இதுவரை 18 மாநிலங்கள், 1 யூனியன் பிரதேசத்தில் லோக் ஆயுக்தா ஏற்படுத்தப்பட்டுள்ளது.
  1.மகாராஷ்டிரா-1971, 2.ராஜஸ்தான்-1973, 3.பீகார்-1974, 4.உத்திரபிரதேசம்-1975, 5.மத்தியபிரதேசம்-1981, 6.ஒடிசா-1983, 7.ஆந்திரபிரதேசம்-1983,

8.ஹிமாச்சலபிரதேசம்-1983, 9.கர்நாடகா-1935, 10.அஸ்ஸாம்-1985, 11.குஜராத்-1986, 12.பஞ்சாப்-1995, 13.டெல்லி-1995, 14.கேரளா-1999, 15.ஜார்கண்ட்-2001, 16.சத்தீஸ்கர்-2002, 17.ஹரியானா-2002, 18.உத்தர்கண்ட்-2002, 19.கோவா-2011.

- முதலில் ஏற்படுத்திய மாநிலம் - மகாராஷ்டிரா(1971)
- ஒடிசாவில் 1970-ல் சட்டம் இயற்றப்பட்டு 1983-ல் ஏற்படுத்தப்பட்டது.
- தமிழ்நாட்டில் லோக் ஆயுக்தா அமைப்பு 2018ல் ஏற்படுத்தப்பட்டு முதல் தலைவராக நிதியரசர் தேவதாஸ் என்பவரை 2019ல் நியமித்தது.
- தலைவர் மற்றும் உறுப்பினர் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும்.
- தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிப்பவர் - ஆளுநர்.
- சில மாநிலங்களில் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி, எதிர்கட்சி தலைவரை கலந்தாலோசித்தபின் ஆளுநர் நியமிப்பார்.
- ஆந்திரபிரதேசத்தில் சட்டப்பேரவை எதிர்கட்சி தலைவரை கலந்தாலோசிப்பதில்லை, கர்நாடகாவில் சட்ட மேலவை தலைவர், சட்டப்பேரவை சபாநாயகர், சட்டமேலவை எதிர்கட்சி தலைவர் ஆகியோரையும் கலந்தாலோசிக்கப்படுகிறது.
- தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிகாலம் - 5ஆண்டுகள் (அ) 65வயது வரை.
- தகுதிகள் நிர்ணயிக்கப்படவில்லை, சில மாநிலங்களில் நீதித்துறை தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- தலைவர், உறுப்பினர்கள் மறுநியமனத்திற்கு தகுதியற்றவர்கள்.
- ராஜஸ்தான், கர்நாடகா, ஆந்திரபிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் லோக் ஆயுக்தா(LOKAYUKTA), அபலோக் ஆயுக்தா(UPALOKAYUKTA) இரண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- பீகார், உத்திரபிரதேசம், ஹிமாச்சலபிரதேசம் ஆகிய மாநிலங்களில் லோக் ஆயுக்தா மட்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிரா லோக் ஆயுக்தா, முன்னாள் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களையும், முன்னாள் சிவில் பணியாளர்களையும் விசாரிக்கும்.
- ஹிமாச்சல பிரதேசம், ஆந்திரபிரதேசம், மத்தியபிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களில் முதலமைச்சர் லோக் ஆயுக்தாவின் வரம்பிற்கு உட்பட்டவர்.
- மகாராஷ்டிரா, உத்திரபிரதேசம்,ராஜஸ்தான், பீகார், ஒடிசா ஆகிய மாநிலங்களில் முதலமைச்சர் லோக் ஆயுக்தாவின் வரம்பிற்குள் இடம் பெறமாட்டார்.
- அனைத்து மாநிலங்களிலும் அமைச்சர்கள், உயர்நிலை சிவில் பணியாளர்கள் லோக் ஆயுக்தாவின் வரம்பிற்குள் இடம் பெறுவர்.
- ஆந்திரபிரதேசம், ஹிமாச்சலபிரதேசம், உத்திரபிரதேசம், குஜராத், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் லோக் ஆயுக்தாவின் வரம்பிற்கள் இடம் பெறுவர்.

- லோக் ஆயுக்தா ஊழல் தொடர்பான நடவடிக்கையெடுக்க மாநில அரசுக்கு பரிந்துரைக்கும், ஆனால் தண்டனை வழங்க இயலாது.
- லோக் ஆயுக்தா மாநில சட்டமன்றத்திற்கு பொறுப்புடையது.
- ஆண்டறிக்கை ஆளுநரிடம் அளிக்கும். ஆளுநர் அதனை சட்டமன்ற ஒப்புதலுக்கு அனுப்பிவைப்பார்.
- லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம் நடைமுறைக்கு வந்த 1 ஆண்டிற்கு மாநிலங்களில் லோக் ஆயுக்தா ஏற்படுத்த வேண்டும்.
- 2012 நவம்பரில் 11-வது அகில இந்திய லோக் ஆயுக்தா மாநாடு நடைபெற்றது.

**மாதிரி வினாத்தாள்**

1. தேர்தல் ஆணையம் குறித்த கூற்றுகளில் சரியானதை தேர்ந்தெடு:
    1. 1993 ஆம் ஆண்டு முதல் தலைமை தேர்தல் ஆணையர்க்கு உதவ மேலும் இரண்டு தலைமை தேர்தல் ஆணையர்களை குடியரசுத் தலைவர் நியமித்தார்.
    2. தேர்தல் ஆணையர்கள் உயர் நீதிமன்ற நீதிபதிக்கு இணையான அதிகாரம் பெற்றவர்கள்.
    3. தேர்தலுக்கு அரசு நிதி வழங்குவதை ஆராய 1998 ல் இந்திரஜித் குப்தா தலைமையில் குழு அமைக்கப்பட்டது.
    4. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26 வாக்காளர் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

    A. அனைத்தும் சரி  B. 1,2,4 சரி  C. 1,3 சரி  D. 2,3 சரி  E. விடை தெரியவில்லை
2. முகவுரையை வழக்குரைஞர்களின் சொர்க்கம் என கூறியவர் யார்?

    A. ஐவர் ஜென்னிங்ஸ்  B. ஏ.வி. டைசி  C. அம்பேத்கர்  D. ஜவஹர்லால் நேரு

    E. விடை தெரியவில்லை
3. அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகளில் காந்திய நெறிகளின் கீழ் தொடர்பில்லாத விதி எது?

    A. மது மற்றும் போதைப்பொருள் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு

    B. கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளை ஏற்படுத்துதல்

    C. SC/ST மற்றும் சமூகத்தில் நலிவுற்ற பிரிவினர்களின் கல்வி மற்றும் நல முன்னேற்றத்திற்கு அரசு நடவடிக்கை எடுத்தல்.

    D. மகப்பேறு உதவி கிடைக்கச் செய்தல்.

    E. விடை தெரியவில்லை
4. தேர்தல் தொடர்பான குழுக்களை காலவரிசைப்படுத்துக.
    1. தார்குந்த் குழு
    2. தினேஷ் கோஸ்வாமி குழு
    3. வோஹரா குழு
    4. இந்திரஜித் குப்தா குழு

    A. 4 3 2 1  B. 1 2 3 4  C. 3 4 1 2  D. 1 3 2 4  E. விடை தெரியவில்லை

5. நிதி ஆயோக் பற்றிய கூற்றுகளில் சரியானதை தேர்வு செய்க:
   1. இதன் தலைவர் பிரதமர்.
   2. நிதி ஆயோக் K.C. நியோகி கமிட்டியின் பரிந்துரையின்படி ஜனவரி 1, 2015 அன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.
   3. மத்திய - மாநில அரசுகளுக்கு தகவல் தொழில் ஆலோசனைகளை வழங்குதல் இதன் பணியாகும்.
   4. நிதி ஆயோக் -ன் தற்போதைய துணைத்தலைவர் ராஜீவ் குமார்.

   A. அனைத்தும் சரி B. 1,3,4 சரி C. 1,2,3 சரி D. 1,2 சரி E. விடை தெரியவில்லை

6. தேசிய சின்னங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டுகளை காலவரிசைப்படுத்துக.
   1. தேசியப் பறவை
   2. தேசிய நதி
   3. தேசிய உறுதிமொழி
   4. தேசிய நுண்ணுயிரி

   A. 1 2 3 4 B. 3 4 2 1 C. 3 4 1 2 D. 1 3 2 4 E. விடை தெரியவில்லை

7. இந்திய பிரதமர்கள் வகித்த பதவி காலத்தை பொறுத்து காலவரிசைப்படுத்துக.
   1. ராஜீவ் காந்தி 2. நரசிம்மராவ் 3. மொரார்ஜிதேசாய் 4. தேவகவுடா

   A. 1 2 3 4 B. 3 4 2 1 C. 3 1 2 4 D. 1 3 2 4 E. விடை தெரியவில்லை

8. மத்திய தகவல் ஆணையரை குடியரசுத் தலைவர் யார் பரிந்துரையின் அடிப்படையில் நியமிக்கிறார்?

   A. பிரதமர், சபாநாயகர், லோக்சபா எதிர்கட்சி தலைவர்.

   B. பிரதமர், லோக்சபா எதிர்கட்சி தலைவர், ஆளுநர்கள், முதலமைச்சர்கள்

   C. பிரதமர், லோக்சபா எதிர்கட்சி தலைவர், மத்திய கேபினட் அமைச்சர்

   D. பிரதமர், சபாநாயகர், முதலமைச்சர்கள்

   E. விடை தெரியவில்லை

9. தவறானதை தேர்வு செய்க:

   A. இந்தியாவின் முதல் பெண் மாநில முதலமைச்சர் - சரோஜினி நாயுடு

   B. முதல் பெண் காவல்துறை இயக்குநர் (DGP) - காஞ்சன் சௌத்ரி பட்டாச்சாரியா

   C. முதல் பெண் காவல்துறை உயர் அதிகாரி (IPS) - கிரண்பேடி

D. முதல் பெண் மத்திய வெளியுறவு அமைச்சர் - சுஷ்மா ஸ்வராஜ்

E. விடை தெரியவில்லை

10. அடிப்படை உரிமைகளில் இந்திய குடிமகன்களுக்கு மட்டும் கிடைக்க கூடியவைகளில் தவறான ஷரத்து எது?

A. ஷரத்து 14 B. ஷரத்து 29 C. ஷரத்து 19 D. ஷரத்து 15

E. விடை தெரியவில்லை

Answer Key

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| C | A | D | B | B | D | C | C | A | A |